# தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை



மானியக் கோரிக்கை
எண்.32



## அறிவிப்புகள் 2024-2025

## சி.வி.கணேசன்

தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்

# தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை

மானியக் கோரிக்கை எண்.32

## அறிவிப்புகள்
## 2024-2025


**சி.வி.கணேசன்**

தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்

1. தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 1,000 பெண் / திருநங்கை ஓட்டுநர்கள் புதியதாக ஆட்டோ வாகனம் வாங்கும் செலவினத்தில் தலா ஒரு இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள பெண் / திருநங்கை ஓட்டுநர்கள் சொந்தமாக ஆட்டோ வாகனம் வாங்குவதை ஊக்குவித்து அதிக வருமானம் ஈட்டி சுய தொழில் செய்யும் வாய்ப்பினை உருவாக்கிட புதியதாக ஆட்டோ வாகனம் வாங்குவதற்கு ஆகும் செலவினத்தில் மானியமாக தலா ஒரு இலட்சம் ரூபாய் 1,000 பெண் / திருநங்கை ஆட்டோ ஓட்டுநர்களுக்கு வழங்கப்படும்.

## 2. பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு புத்தாக்கப்பயிற்சி 24.90 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பட்டாசு உற்பத்தியின் போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் மற்றும் இரசாயனங்களை பாதுகாப்பாக கையாள்வது குறித்து விருதுநகர் மாவட்டம் மற்றும் பட்டாசு தொழிற்சாலைகள் அதிக அளவில் அமையப்பெற்றுள்ள இதர 8 மாவட்டங்களில் இந்நிதியாண்டில் 7,500 தொழிலாளர்களுக்கு 24.90 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு நாள் புத்தாக்கப்பயிற்சி வழங்கப்படும்.

## 3. தொழிற்சாலைகளில் பயன்பாட்டில் உள்ள நவீன தொழில்நுட்ப யுத்திகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொடர்பாக 15 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி வழங்கப்படும்.

சமீபகாலமாக, தொழிற்சாலைகளில் உற்பத்தி பணிகளில் செயல்படுத்தப்பட்டுவரும் நவீன புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு உபயோகங்களால் ஏற்படும் அபாயங்களை முழுமையாக கண்டறிந்து அதற்கேற்றபடி சட்ட அமலாக்கத்தினை மேம்படுத்தி பாதுகாப்பினை உறுதி செய்ய தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களுக்கு 15 இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி வழங்கப்படும்.

## 4. தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களுக்கு 29.65 இலட்சம் ரூபாய் செலவில் மடிக்கணினிகள் வழங்கப்படும்.

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக வலைதளத்தின் மூலம் தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான நிறுவனங்களுக்கு, இணைய வழியாக சேவைகளை துரிதமாக வழங்க ஏதுவாக இயக்குநர், முதுநிலை கூடுதல் இயக்குநர்கள், கூடுதல் இயக்குநர்கள் மற்றும் இணை இயக்குநர் பதவியில் உள்ள 42 அலுவலர்களுக்கு மடிக்கணினிகள் 29.65 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 5. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் நிர்வாக அலுவலகம் மற்றும் கணினி தொடர்பான வசதிகள் மேம்படுத்தப்படும்.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய கணினி அறை, வகுப்புகள் மற்றும் நிர்வாக அலுவலகத்திற்கு கணினி, பிரிண்டர், நகல் எடுப்பான், ப்ரொஜெக்டர் மற்றும் ஸ்மார்ட் வகுப்பறை, ஒளி-ஒலி சாதனங்கள் போன்ற வசதிகள் 32.89 இலட்சம் ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

## 6. புதியதாக வளர்ந்து வரும் தொழில் வாய்ப்புகள் மற்றும் பிற தொழில் வாய்ப்புகள் குறித்து ஊடாடல் காணொலி காட்சிப்பதிவுகள் கல்வி தொலைக்காட்சி வாயிலாக ஒளிபரப்பப்படும்.

சென்னை, மாநில தொழில்நெறி வழிகாட்டும் மையத்தால், ஒவ்வொரு தொழிலிலும் வல்லுநர்கள் மற்றும் வெற்றிகரமான ஆளுமைகளைக் கண்டறிந்து, ஊடாடல் காணொலிகளை பதிவு செய்து, கல்வி தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பி, மாணவர்களிடையே பல்வேறு தொழில் வாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இக்காணொலிகள் மெய்நிகர் கற்றல் இணையதளத்திலும் பதிவேற்றம் செய்யப்படும்.

## 7. 32 அரசு தொழிற்பயிற்சி நிலைங்களில் உள்ள வகுப்பறைகளில் இணையதள வசதியுடன் கூடிய ஸ்மார்ட் டிவி வசதி 10.11 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தி தரப்படும்.

தொழிற்பயிற்சிக்கான கருத்தியல் பாடங்களை மாணவர்கள் எளிதில் கற்றுக்கொள்ளவும், கற்றல் திறனை அதிகப்படுத்தவும், பாடங்கள் மற்றும் செய்முறை விளக்கங்களை தொலைக்காட்சிகள் மூலம் கற்றுக் கொள்ளும் வகையிலும், யூடியூப் மற்றும் பிற சமூக ஊடகங்களின் மூலம் திறன் பயிற்சிகளை கற்றுக்கொள்ளவும் இணையதள வசதியுடன் கூடிய ஸ்மார்ட் டிவி, 32 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள வகுப்பறைகளில் 10.11 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

## 8. அரசு தொழிற்பயிற்சி நிலைய விடுதிகளில் 92 இலட்சம் ரூபாய் செலவில் நூலகங்கள் அமைக்கப்படும்.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர்களின் பொது அறிவை வளர்ப்பதற்கும், சமூகத் திறன்களை மேம்படுத்திடவும் 50 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள மாணவர் விடுதிகளில் 92 இலட்சம் ரூபாய் செலவில் ஸ்மார்ட் டிவி மற்றும் இணையதளத்துடன் கூடிய கணினி வசதியுடன் நூலகங்கள் அமைக்கப்படும்.

**9. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வரும் மாணவர்களுக்கு 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் நவீன தொழில் நுட்பங்களில் குறுகிய கால பயிற்சி அளிக்கப்படும்.**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் பயின்று வரும் மாணவர்களின் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் பொருட்டு, 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள தொழில் 4.0 தொழில்நுட்பமைய உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தி மாணவர்களின் தொழிற்பிரிவிற்கு தொடர்புடைய குறுகிய கால பயிற்சி தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் வழங்கப்படும்.

10. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு, அவர்களின் தொழில் திறனை மேம்படுத்துவதற்கு 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி வசதிகள் செய்து தரப்படும்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் தங்களது தொழில் திறனை புதுப்பித்துக் கொள்வதற்கு நவீன தொழில்நுட்பங்கள், இயந்திரங்கள், தளவாடங்கள் மற்றும் மென்பொருட்கள் ஆகியவற்றில் பயிற்சி எடுத்துக் கொள்வதற்காக 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களின் மூலம் வசதிகள் செய்து தரப்படும்.

## 11. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வழங்கப்படும் பயிற்சிக் கட்டணம் விரைவாக வழங்குவதற்காக இணையதள வசதி உருவாக்கப்படும்.

திறன்மிக்க தொழிலாளர்களை உருவாக்குவதை ஊக்குவிப்பதற்காக தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் சேர்ந்து பயிற்சி பெறும் மாணவர்களுக்கு பயிற்சிக்கட்டணம் மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அப்பயிற்சி கட்டணம் விரைவாக வழங்க தனி இணையதள வசதி, துறையிலுள்ள தொழில்நுட்ப நிபுணர்கள் மூலம் உருவாக்கப்படும்.

## 12. தனியார் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கும் அந்த மாவட்டத்தின் நேரடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் மூலமாக வேலைவாய்ப்பு பெற்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**சி.வி.கணேசன்**
தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்